# 4.7 எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்

**வேத வசனம்:** ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரி 10:31

**அறிக்கை:**
பூமி முழுவதும் தேவனுடைய மகிமையால் நிரம்பத்தக்கதாகத் தேவனை உயர்த்துங்கள்

**சத்தியம்:** கர்த்தராகிய இயேசு சிலுவையினால் எல்லா மக்களுக்கும் சமாதானப்பிரபுவாக விளங்குகிறார். நாம் எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்தும்படி அவர் விரும்புகிறார். அன்மூலம் மற்றவர்கள் அவருடைய இரட்சிப்பையும் மகிமையையும் அறிந்துகொள்ளுவார்கள்.

## பாடக்குறிப்புகள்

* **எல்லா மக்களும் தேவனுடைய மகிமையைக் காண்பார்களாக** - *ரோ 8:22*
* **இருதயங்கள் தேவனிடம் திரும்பும்படி தேவனை மகிமைப்படுத்துங்கள்** - *யோ. 12:32, 1கொரி 1:18*
* **தேவன் வாலிபர்களை வல்லமையாகப் பயன்படுத்த முடியும்** - *யோவான் 6:1-13, மத். 21:15*
* **எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்** - *1 கொரி. 6:20*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- தேவனை மகிமைப்படுத்துவது என்றால் என்ன?
- துன்பத்திலும், கடின நேரங்களிலும் தேவனை எவ்விதம் மகிமைப்படுத்தலாம்?
- வருங்காலங்களில் தேவனுடைய மகிமையைக்குறித்து ஆபகூக் தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? (ஆபகூக் 2:14)

**வேதப்பகுதி**
*மத்தேயு 21:1-9*

## நிச்சயமற்ற சூழ்நிலையிலும் தேவனை மகிமைப்படுத்தி அவர் மேல் விசுவாசமாயிருங்கள்

எப்பொழுது என்ன நடக்கும் என்கிற நிச்சயமற்ற உலகில் வாழ்வது போலத் தெரியலாம். அது நம்மை பயத்திலும் கவலையிலும் அமிழ்த்துகிறது. ஆனால் நாம் அதைக்குறித்து வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. என்றோ ஒரு நாள் நாம் பரலோகத்தை அடைவதற்காக இயேசு சிலுவையில் மரிக்கவில்லை. இப்பொழுதே ஒரு பரிபூரணமான மகிழ்ச்சியான வாழ்க்கையை நாம் அனுபவிப்பதற்காகவும் அவர் மரித்திருக்கிறார். தேவன் ஒரு சிறுவனித்தில் இருந்த ஐந்து அப்பம் இரண்டு மீன்களை வைத்து ஐயாயிரம் பேரைப் போஷித்தார் என்பதை வேதம் பதித்துவைத்திருக்கிறது. அதிசயங்களின் தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

**செயல்**

துன்பங்களில் தேவனை நோக்குவது கடினம். ஆனால் அவ்விதம் செய்யும்போது நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். அதன்மூலம் அவர் நம்மை பெலப்படுத்தி விடுவிப்பார். அடுத்தமுறை பிரச்சனைகள் உங்களை கீழே இழுக்கும்போது தேவனை மகிமைப்படுத்துங்கள். அவர் உங்களைத் தூக்கி எடுப்பார்.

**சிந்திக்க:**
செய்கிற எல்லா காரியத்திலும் தேவனை எவ்விதம் மகிமைப்படுத்த முடியும்?

______________________________

______________________________

**ஜெபம்:**

கடினமான நேரங்களில் தேவனை மகிமைப்படுத்தும்படி உங்களுக்கு ஞானத்தையும் பெலனையும் தரும்படி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.

______________________________

______________________________